செய்தி வெளியீடு **நாள் : 07.01.2026**

சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு வருகின்ற 8.1.2026 முதல் பொங்கல் சிறப்பு சந்தை – 2026 நடைபெறவுள்ளது மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.

****

தைத்திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் விவசாயிகளே நேரடியாக தங்களுடைய விளைச்சல் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை தொடர்ந்து சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமானது அங்காடி நிர்வாகக் குழுவின் மூலமாக 7 ஏக்கர் பரப்பளவில் **பொங்கல் சிறப்பு சந்தை வருகின்ற 8.1.2026 முதல்** செயல்படுத்தவுள்ளது என மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தகவல்.

சிறப்பு சந்தைக்கான கரும்பு விழுப்புரம், திண்டிவனம், கடலூர், மதுரை மற்றும் சேத்தியாத்தோப்பு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வாகனங்களில் வரவுள்ளது. அதேபோன்று மஞ்சள் மற்றும் இஞ்சி கொத்து ஆகியவை ஈரோடு, சேலம் மற்றும் ஆந்திராவில் இருந்து வரவழைக்கப்படுகிறது. தோரணம் உள்ளிட்ட பொருட்கள் குடியாத்தம் பகுதியிலிருந்து வரும் விவசாயிகளால் விற்பனை செய்வது வாடிக்கையாக இருந்து வருகிறது.

இச்சிறப்புச் சந்தைக்கு தேவையான வசதிகளான தெருவிளக்கு, குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. போக்குவரத்து நெரிசலின்றி வியாபாரம் மேற்கொள்ளும் வகையில் காவல்துறையினரின் மூலம் நடவடிக்கை எடுப்பதோடு, அங்காடி நிர்வாகக் குழு ஊழியர்கள் மற்றும் பாதுகாவலர்களும் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தவுள்ளனர். மேலும், இச்சிறப்புச் சந்தையில் துப்புரவு பணியினை முழு வீச்சில் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச்சிறப்பு சந்தையினை **வருகின்ற 8.1.2026 முதல்** 17.01.2026 வரை செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

Verified RedEstate™